ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப்பத்திரிகை
அதி விசேஷமானது

අංක 2329/35 - 2023 අප්‍රේල් මස 26 වැනි බදාදා - 2023.04.26
*2329/35 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 26 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV(அ) - மாகாண சபை

### மாகாண சபை அறிவித்தல்கள்

**தென் மாகாண மாகாண சபை**

தென் மாகாண மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க வியாபார நிலையம் பதிவு செய்தல் தொடர்பான சாசனம்

**விதிகள் (வர்த்தக இடங்களின் பதிவுக் கட்டணத்தில் திருத்தம்)**

வழங்கல் மற்றும் விநியோகம், வர்த்தகம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி ஆகியவற்றிற்கு பொறுப்பான அமைச்சருக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்கள், மேற்படி மாகாண சபை கலைக்கப்பட்டதால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 உ ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் தென் மாகாண ஆளுநர் வில்லியம் விஜேசிங்க கமகே என்னும் நான் தென் மாகாண சபையின் 2019 ஆண்டின் 04 ஆம் இலக்கம் உடைய வியாபார நிலையம் பதிவு செய்தல் தொடர்பான சாசனத்தின் விதிகளின் படி இலக்கம் 2143/58 - 2019 ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளியன்று வர்த்தமானப் பத்திரிகையில் 04 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள வியாபார நிலையம் பதிவு செய்தல் மற்றும் தென் மாகாண சபையின் 2019 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கமுடைய வியாபார நிலையம் பதிவுசெய்தல் தொடர்பான சாசனத்தில் 19 ஆம் பிரிவின் கீழ் தென் மாகாண மாகாண சபையின் விவசாயம், விவசாய அபிவிருத்தி, நீர்ப்பாசனம், நீர் வழங்கல் மற்றும் வடிகால் மற்றும் உணவு வழங்கல் கட்டணங்களை பின்வருமாறு திருத்துகின்றேன். இந்த விதிகளின் திருத்தம் வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

04. 2019 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க தென் மாகாண வியாபார நிலையங்கள் பதிவுச்செய்யும் சாசனத்தின் 18(1) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் சான்றிதழ் அல்லது பிரகடனத்தை வழங்குவதற்கு தொடர்புடைய கட்டணங்களின்படி காட்டப்பட்டுள்ள தொகையின் கீழ் கட்டணம் வசூலிக்கப்படும்.

இங்கே வியாபார நிலையம் பதிவுசெய்யும் போது சமர்ப்பிக்கப்படும் மூலதனம் அல்லது விற்றுமுதல் கணக்கில் ஆகிய இரண்டில் உயர்ந்ததைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

1A - PG 6307 — 09 (2023/04)
*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

| வேலைகள் | கட்டணத்தொகை |
|---|---|
| 4.1 தனி நபர் அல்லது கூட்டாண்மை வியாபார நிலையம் பதிவுசெய்யப்பட்டு சான்றிதழ் வழங்குவதற்காக | |
| 1. ரூபா 500,000 அல்லது அதற்கு மேற்பட்ட வியாபாரத்திற்காக | ரூபா 4,000.00 |
| 2. ரூபா 250,000 இருந்து ரூ. 499,999.00 வரை வியாபாரத்திற்காக | ரூபா 2,875.00 |
| 3. ரூபா 100,000 இருந்து ரூ. 249,999.00 வரை வியாபாரத்திற்காக | ரூபா 1,725.00 |
| 4. ரூபா 50,000 இருந்து ரூ. 99,999.00 வரை வியாபாரத்திற்காக | ரூபா 1,150.00 |
| 5. ரூபா 50,000 க்கு குறைந்த வியாபாரத்திற்காக | ரூபா 575.00 |
| 4.2 5 ஆவது பந்தியின் கீழ் சமர்ப்பிக்கப்பட்ட திருத்தப்பட்ட அறிக்கையை வழங்குதல் செய்வதற்கு கட்டணம் | |
| 1. ரூபா 250,000 அல்லது அதற்கு மேற்படட்ட வியாபாரத்திற்காக | ரூபா 1,150.00 |
| 2. ரூபா 250,000 க்கு குறைந்த வியாபாரத்திற்காக | ரூபா 865.00 |
| 4.3 ஆவணங்களை ஆய்வு செய்வதற்கான விண்ணப்பக் கட்டணம் | |
| 1. ரூபா 250,000 அல்லது அதற்கு மேற்படட்ட வியாபாரத்திற்காக | ரூபா 575.00 |
| 2. ரூபா 250,000 க்கு குறைந்த வியாபாரத்திற்காக | ரூபா 290.00 |
| 4.4 பதிவுச் சான்றிதழின் நகலைப் பெறுவதற்கான கட்டணம் | |
| 1. ரூபா 250,000 அல்லது அதற்கு மேற்படட்ட வியாபாரத்திற்காக | ரூபா 1,150.00 |
| 2. ரூபா 250,000 க்கு குறைந்த வியாபாரத்திற்காக | ரூபா 865.00 |

4.5 ஒரு வியாபாரத்தை தாமதமாகப் பதிவு செய்வதற்கான கட்டணங்கள் அறவிடல்

வியாபாரம் பெயர் பதிவுக்கான வியாபாரம் ஆரம்பித்து 30 நாட்களுக்குள் பதிவு செய்வதற்கான அதன் 2 வது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள படிவங்களைப் பயன்படுத்தி பதிவு செய்யப்பட வேண்டும். அந்த 30 நாட்கள் காலாவதியாகும் சந்தர்ப்பங்களில் தாமதக் கட்டணம் பின்வருமாறு :

31 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை வியாபாரத்தை பதிவு செய்யும் குறிப்பிட்ட கட்டணம் மற்றும் அதற்கு மேலதிகமாக ரூ. 2,875.00 அபராத கட்டணம் தாமதக் கட்டணமாக வசூலிக்கப்படும்.

வியாபாரத்தைத் தொடங்கி 91 நாட்களைக் கடந்த எந்த வணிகமும் பதிவு செய்ய உரிமை பெறாது.

**டாக்டர் வில்லியம் விஜேசிங்க கமகே,**
தென் மாகாண ஆளுநர்.

காலியில்
2023, ஏப்பிறல் 10.

EOG 04-0182

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.